ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

# ॥ கண்ணினுண் சிறுத்தாம்பு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணிநுண் சிறுத்தாம்பு ॥

அவிதி3தவிஷயாந்தரஶ்ஶடா2ரே:
    உபநிஷதா3முபகா3நமாத்ரபோ4க3: ।
அபி ச கு3ணவஶாத் ததே3கஶேஷீ
    மது4ரகவிர்ஹ்ருத3யே மமாவிரஸ்து ॥

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த⋆
    மாறன் சடகோபன் வண்குருகூர்⋆ - ஏரெங்கள்
வாழ்வாம் என்றேத்தும்⋆ மதுரகவியார் எம்மை
    ஆள்வார் அவரே அரண்

‡கண்ணி நுண்சிறுத் தாம்பினால்⋆ கட்டுண்ணப்
    பண்ணிய பெருமாயன்⋆ என்னப்பனில்⋆
நண்ணித் தென்குருகூர்⋆ நம்பி என்றக்கால்⋆
    அண்ணிக்கும் அமுதூறும்⋆ என்நாவுக்கே (1)

நாவினால் நவிற்று⋆ இன்பம் எய்தினேன்⋆
    மேவினேன்⋆ அவன் பொன்னடி மெய்ம்மையே⋆
தேவு மற்றறியேன்⋆ குருகூர் நம்பி⋆
    பாவின் இன்னிசை⋆ பாடித் திரிவனே (2)

திரிதந்தாகிலும்⋆ தேவபிரான் உடை⋆
    கரிய கோலத்⋆ திருவுருக் காண்பன் நான்⋆
பெரிய வண்குருகூர்⋆ நகர் நம்பிக்காள்
    உரியனாய்⋆ அடியேன்⋆ பெற்ற நன்மையே (3)

நன்மையால் மிக்க⋆ நான்மறை ஆளர்கள்⋆
    புன்மை ஆகக்⋆ கருதுவர் ஆதலில்⋆
அன்னையாய் அத்தனாய்⋆ என்னை ஆண்டிடும்
    தன்மையான்⋆ சடகோபன்⋆ என் நம்பியே (4)

நம்பினேன்⋆ பிறர் நன்பொருள் தன்னையும்⋆
    நம்பினேன்⋆ மட வாரையும் முன்னெலாம்⋆
செம்பொன் மாடத்⋆ திருக்குருகூர் நம்பிக்-
    கன்பனாய்⋆ அடியேன்⋆ சதிர்த்தேன் இன்றே (5)

இன்று தொட்டும்⋆ எழுமையும் எம்பிரான்⋆
    நின்று தன்புகழ்⋆ ஏத்த அருளினான்⋆
குன்ற மாடத்⋆ திருக் குருகூர் நம்பி⋆
    என்றும் என்னை⋆ இகழ்விலன் காண்மினே (6)

கண்டு கொண்டென்னைக்⋆ காரி மாறப்பிரான்⋆
    பண்டை வல்வினை⋆ பாற்றி அருளினான்⋆
எண்டிசையும்⋆ அறிய இயம்புகேன்⋆
    ஒண்டமிழ்⋆ சடகோபன் அருளையே (7)

அருள் கொண்டாடும்⋆ அடியவர் இன்புற⋆
    அருளினான்⋆ அவ்வருமறையின் பொருள்⋆
அருள் கொண்டு⋆ ஆயிரம் இன்தமிழ் பாடினான்⋆
    அருள் கண்டீர்⋆ இவ்வுலகினில் மிக்கதே (8)

மிக்க வேதியர்⋆ வேதத்தின் உட்பொருள்⋆
    நிற்கப் பாடி⋆ என் நெஞ்சுள் நிறுத்தினான்⋆
தக்க சீர்ச்⋆ சடகோபன் என் நம்பிக்கு⋆ ஆட்-
    புக்க காதல்⋆ அடிமைப் பயனன்றே (9)

‡பயன் அன்றாகிலும்⋆ பாங்கலர் ஆகிலும்⋆
    செயல் நன்றாகத்⋆ திருத்திப் பணிகொள்வான்⋆
குயில் நின்றார் பொழில் சூழ்⋆ குருகூர் நம்பி⋆
    முயல்கின்றேன்⋆ உந்தன் மொய் கழற்கன்பையே (10)

‡அன்பன் தன்னை⋆ அடைந்தவர்கட்கெல்லாம்
    அன்பன்⋆ தென் குருகூர்⋆ நகர் நம்பிக்கு⋆
அன்பனாய்⋆ மதுரகவி சொன்ன சொல்
    நம்புவார் பதி⋆ வைகுந்தம் காண்மினே (11)

‖ மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம் ‖